**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>**

**<u>முன்னிலை: திருமதி.V.சிவகாமசுந்தரி, பி.ஏ.,பி.எல்.,</u>**

**<u>மாவட்ட உரிமையியல் நீதிபதி, அறந்தாங்கி.</u>**

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 27-ம் நாள் வியாழக்கிழமை

**IA No.01/2025**

**In**

**O.S No.14/2021**

1) காசி,

2) பார்கவி (இவரின் பவர்

ஏஜெண்ட் செல்வி மூலமாக) ......**மனுதாரர்கள்/வாதிகள்**

**//எதிர்//**

1) சோமி,

2) ரவிச்சந்திரன்,

3) ராஜேஸ்வரி,

4) பூமாதா,

5) முத்து மீனாட்சி ......**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்**

இந்த மனுவானது இந்த நீதிமன்றத்தில் என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.கோவிந்தராசு.,M.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ப.சிங்காரவேலு.,B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், இந்த மனு சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களும் இந்த நீதிமன்றத்தினால் நன்கு கவனமாக பரிசீலனை செய்யப்பட்டும், இந்நாள் வரையில் என் சீரான பரிசீலனையில் இருந்து, இன்று இந்த நீதிமன்றம் வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இந்த மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 06 விதி 17-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்:-**

மேற்படி வழக்கு இன்றைய தினம் பிராதை திருத்துவதற்காக வாய்தா போடப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் கண்ட 2 வது அயிட்ட சொத்தை ஏற்கனவே இந்த வழக்கில் கண்ட பிரதிவாதிகளுக்கு 2 வது வாதி கிரையம் செய்து கொடுத்துவிட்டார். 1 வது அயிட்ட சொத்து மட்டும் தான் பிராதில் இருக்க வேண்டும். இந்த சொத்தை பொறுத்து மட்டும் வழக்கை மேல் நடத்த வேண்டியது அவசியமாக உள்ளது. அதனால் இந்த வழக்கில் கண்ட 2 வது அயிட்ட சொத்தை நீக்கம் செய்து கொண்டு அதன்படி வழக்கை திருத்தம் செய்து கொள்ள வேண்டி இந்த திருத்தல் மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:-**

மனுதாரர் தனது மனுவில் சொல்லி உள்ள விவரங்கள் முழுவதையும் எதிர்மனுதாரர் மறுக்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்து சில ஆண்டுகள் கழித்து மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்கிறார். வழக்கு தற்போதைய நிலையில் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்திருப்பது ஏற்புடையதல்ல. மனுதாரர் தனது மனுவில் கூறும் காரணம் யாவும் அப்பட்டமான பொய்யாகும். மனுதாரர் நீதிமன்ற நேரத்தை வீணடிக்கும் விதமாக செயல்படுகிறார். மனுதாரரின் மனு ஏற்புடையதல்ல. மனுதாரரின் மனு உண்மைக்கு புறம்பானதாகும். மேலும் மனுதாரர் கூறும் பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கதக்கதல்ல. மனுதாரரின் மனு தற்போதுள்ள நிலையில் ஏற்கத்தக்கதல்ல. எனவே மனுதாரரின் இந்த மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டி கட்சி செய்யப்பட்டுள்ளது.

**3. தற்போது இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய முக்கிய சங்கதி யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா? என்பதாகும்.**

இந்த மனுவானது மனுதாரர்/வாதியால் வழக்கு 2 வது அயிட்ட சொத்தை ஏற்கனவே வழக்கில் கண்ட பிரதிவாதிகளுக்கு வாதி கிரையம் கொடுத்துவிட்டதால் அந்த சொத்தை வழக்கிலிருந்து நீக்க வேண்டுமென்று கட்சி செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த ஆட்சேபனையில் மனுவில் சொல்லியுள்ள காரணம் பொய்யென்றும் மனுதாரரை அலைகழிவு செய்ய வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கட்சி செய்யப்பட்டுள்ளது.

எதிருரையில் வாதி பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்தது குறிப்பாக மறுக்கப்படவில்லை. இந்த மனுவில் வாதி கோரும் திருத்தமானது வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்ட பிறகு உள்ள திருத்தமாக இருந்தாலும், திருத்தத்திற்கான காரணம் வழக்கு தாக்கல் செய்த பிறகு உருவானது என்பதாலும், வழக்கெழு வினாவை தீர்மானிக்க மேற்படி

திருத்தம் அவசியமானது என்பதாலும், இந்த திருத்தத்தை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/பிரதிவாதிகளுக்கு எந்தவித குந்தகமும் ஏற்படாது என்பதாலும், இந்த திருத்தம் அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

முடிவாக இம்மனு செலவுத்தொகையின்றி அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு பின் அவரால் நேரடியாக கணினி சாதனத்தில் பதிவு செய்யப்பட்டு பின் என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 27-ம் நாள் என்னால் கையொப்பம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/-V.சிவகாமசுந்தரி**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பட்டியல்:-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி**: இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் :** இல்லை

**//உண்மை நகல்//**

SIVAGAMASUNDARY V

Digitally signed by SIVAGAMASUNDARY V
Date: 2025.11.27 17:04:33 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**அறந்தாங்கி.**

**வரைவு/செவ்வை உத்தரவு**
**I.A.No. 01/2025**
**O.S.No. 14/2021**
**நாள். 27.11.2025**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**அறந்தாங்கி.**